# திருச்செங்கோட்டில் - சிலப்பதிகாரக் கோட்டம்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, ஏப்.27-

சட்டப்பேரவையில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, அமைச்சர் முனைவர் பி.டி.ஆர்.பழனி வேல் தியாகராஜனின் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கொங்கு நாடு தேசிய கட்சி ஈ.ஆர்.ஈஸ்வரன் பேசும்போது திருச்செங்கோட்டில் சிலப்பதிகாரக் கோட்டம் அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறுக்கிட்டு அவருடைய கனவு நனவாக்கப்படும் என்று உறுதிபடத் தெரிவித்தார்.

இது பற்றிய விவாதம் வருமாறு:-

**ஈ.ஆர். ஈஸ்வரன்:** பெண்களுடைய சிறப்பைப் பற்றி பேசும்போது எனக்கு வருகிற ஞாபகம் 1973-ஆம் ஆண்டு அப்போது முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருச்செங்கோட்டில் நடைபெற்ற கண்ணகி விழாவிலே கலந்துகொண்டு மிக அருமையாக பெண்களுடைய சிறப்பைப் பற்றி அங்கே பேசியிருக்கிறார். 1953 ஆம் ஆண்டு திருச்செங்கோட்டிலே ஆரம்பிக்கப்பட்ட கண்ணகி விழா, இன்றைக்கும் தொடர்ந்து 72 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

இந்த விழாவை ஆரம்ப காலங்களிலே பெரியவர் மா.பொ.சி. அவர்கள் நடத்தியிருக்கிறார். பிறகு அவரைத் தொடர்ந்து சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள் அந்த விழாவை நடத்தியிருக்கிறார். அவரைத் தொடர்ந்து திருச்செங்கோடு டி.எம். காளியண்ணன் அவர்கள் அந்த விழாவை நடத்தியிருக்கிறார். தொடர்ந்து அந்த முயற்சிகளிலே நானும் அந்த விழாவை திருச்செங்கோட்டிலே நடத்தக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

தொடர்ந்து திருச்செங்கோடு தொகுதியில், அந்தப் பகுதியில் உள்ள மக்களால் இந்த விழாவின்போது சிலப்பதிகாரத்தின் பெருமை பெரிய அளவில் பேசப்படுகிறது. எனவே, இதை நினைவுகூருகின்ற வகையிலே 1973-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிறப்பாக பேசியதையெல்லாம் நினைவுபடுத்துகின்ற வகையில் திருச்செங்கோட்டிலே சிலப்பதிகார கோட்டம் என்ற ஒன்றை அமைக்க வேண்டும். அதற்கு இந்த அரசு முன்வர வேண்டும். முதலமைச்சர் அவர்கள் எனக்கு கருணை காட்ட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் தெரிவித்த கோரிக்கை குறித்து, ஏற்கெனவே இரண்டு முறை என்னை சந்தித்து இது குறித்து விவரமாகச் சொல்லியிருக்கிறார். அதற்குரிய ஆதாரங்களையெல்லாம் அடிப்படையாக வைத்து, நேற்றைக்கு என்னிடம் அவற்றைக் கொண்டு வந்து தந்திருக்கிறார். அது குறித்து அதிகாரிகளிடத்தில் ஆய்வு செய்ய சொல்லியிருக்கிறேன். இப்போது அது குறித்து இங்கேயும் பேசியிருக்கிறார். நிச்சயமாக அவருடைய கனவு நனவாக்கப்படும் என்பதை உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

### கோவை வருகை தரும் துணை முதல்வர்

# உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் – தளபதி முருகேசன் – தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!







கோவை, ஏப். 27-

கோவை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர், மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி. செந்தில்பாலாஜி தலைமையில் வரவேற்பு அளிக்கப்படுகிறது என்று என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அறிக்கை வருமாறு :

இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், திராவிட இயக்கத்தின் வழித்தோன்றல், திராவிட இளஞ்சூரியன், ஒற்றை செங்கல் புரட்சியின் வெற்றி நாயகன், திராவிட இயக்கத்தின் இளந்தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (27.04.2025 - ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 12.00 மணியளவில், சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வருகை தருகிறார். அவருக்கு முற்பகல் 12.00 மணியளவில், விமான நிலைய பகுதியில், மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர், மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் மாபெரும் பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்படுகிறது. மாலை 4.30 மணியளவில் ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள சர்வதேச தரத்திலான ஹாக்கி விளையாட்டு மைதானம் அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். மாலை 5.30 மணியளவில், சிவானந்தா காலனியில், திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் நடைபெற உள்ள பொது மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

இந்நிகழ்ச்சிகளில் ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மேயர், துணை மேயர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து கழக செயல்வீரர்கள், அனைத்து கழகத் தொண்டர்கள், BLA2 நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம் என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி ஆகியோர் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

---

### கி.வீரமணி தலைமை! திராவிடர் கழகம் ஒருங்கிணைப்பில் -

# ஆரிய பண்பாட்டுப் படையெடுப்புக் கண்டன மாநாடு!

## ஆர்.பாலகிருஷ்ணன் - வா.மு.சேதுராமன் பங்கேற்பு!

சென்னை, ஏப்.27-

திராவிடர் கழகம் ஒருங்கிணைப்பில் ஆரிய பண்பாட்டுப் படையெடுப்புக் கண்டன மாநாடு அகஸ்தியப் புரட்டு நாளை (28.04.2025 திங்கள்கிழமை) மாலை 6 மணிக்கு சென்னை பெரியார் திடல், நடிகவேள் எம். ஆர்.ராதா மன்றத்தில் நடைபெறுகிறது.

இந்த நிகழ்ச்சிக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை தாங்குகிறார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவரும், சிந்து வெளி ஆய்வாளருமானஆர். பாலகிருஷ்ணன் தொடக்கவுரை ஆற்றுகிறார்.

பன்னாட்டு தமிழுறவு மன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் நோக்க உரை ஆற்றுகிறார்.

மேலும் பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார், பேராசிரியர் முனைவர் வீ. அரசு, பேராசிரியர் அ. கருணானந்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் தலைவர் முனைவர் வா.நேரு நன்றியுரை ஆற்றுகிறார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அரியலூர் பொன். பக்கிரி

### ஏப்ரல் 27 (2015)



அரியலூர் பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.

1977ஆம் ஆண்டு முதல் ஏழு முறை அரியலூர் நகரச் செயலாளராகவும் – தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1996–ல் அரியலூர் பேரூராட்சி மன்றத் தலைவராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

முதல்வர் தலைமையிலான அரசு - இதுவரை 4,311 டன் கேழ்வரகு கொள்முதல் செய்து

# 2,227 விவசாயிகளுக்கு ரூ.17 கோடியே 30 லட்சம் வழங்கல்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!



சென்னை, ஏப்.27-

சட்டப்பேரவையில் தருமபுரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் அர. சக்கரபாணி அளித்த பதிலும் வருமாறு: -

**எஸ்.பி.வெங்கடேஷ்வரன்:** தருமபுரி மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் அர. சக்கரபாணி :** தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.

தருமபுரி மாவட்டம், அரூர் மற்றும் நரிப்பள்ளியில் 11.3.2025 அன்று நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, தற்போது அங்கு நெல் கொள்முதல் செய்யப்படுகிறது என்பதை வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எஸ்.பி.வெங்கடேஷ்வரன்:** நாம் கடவுளாக வணங்கும் விவசாயிகளின் நலன் கருதி, தருமபுரி மாவட்டத்தினுடைய மையப் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், தருமபுரி மாவட்டத்தில் ராகி கொள்முதல் நிலையம் அமைத்துத் தந்ததற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்ணாகரம், தருமபுரி, அரூர் பகுதிகளிலுள்ள நேரடி கொள்முதல் நிலையங்களில் ராகி கொள்முதல் செய்யப்படுகிறது. அதே போன்று தருமபுரி நகரத்திலும் கொள்முதல் செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், தருமபுரி நகரத்தில் 95 அரிசி ஆலைகள் உள்ளன; அவற்றில் 500 லாரிகள் இருக்கின்றன; 5,000 கூலித் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அந்த அரிசி ஆலைகள் தொடர்ந்து இயங்கி, அந்தத் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைத்திட ஏதுவாக, நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும். அந்த ஆலைகள் இயங்குவது நின்று விடாத வகை யில், வெளி மாவட்டங்களிலிருந்தும் நெல் கொண்டு வரப்பட்டு அங்கு சேமித்து வைக்கப்பட்டு, தொடர்ந்து வேலை வழங்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் அர.சக்கரபாணி:** தமிழ்நாட்டிலேயே தருமபுரி மாவட்டத்தில்தான் அதிகமான நெல் அரவை ஆலைகள் இருக்கின்றன. தெரிவித்தது உண்மை. எனவே, உறுப்பினர் அவர்கள் அந்த நெல் கொள்முதல் அரவை நிலையங்களுக்கு போதுமான நெல்கள் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 24 இலட்சம் மெட்ரிக் டன், இந்த ஆண்டு 32 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை நெல்கொள்முதல் செய்கின்ற பருவம் இருக்கிறது. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணமாக தருமபுரி மாவட்டத்திற்கு கூடுதலாக, அந்த அரவை ஆலைகளுக்கெல்லாம் வேண்டிய நெல்லை அனுப்புவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போன்று, இங்கு கேழ்வரகைப் பற்றி உறுப்பினர்கள் கூறினார்கள். குறிப்பாக, கடந்த காலத்தில் கேழ்வரகு விவசாயிகளிடமிருந்து 26, 27 ரூபாய்க்குத்தான் வாங்கினார்கள். ஆனால், முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டில் இதுவரை 4,311 டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு, 2,227 விவசாயிகளுக்கு 17 கோடியே 30 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது. தருமபுரி மாவட்டத்தில் 2024-2025 ஆம் ஆண்டில் சுமார் 134 விவசாயிகளிடமிருந்து 175 கோடியே 75 இலட்சம் மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு, 71 இலட்சத்து 10 ஆயிரம் விவசாயிகள் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் 829 விவசாயிகளிடமிருந்து 1,908 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டு 8 கோடியே 18 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது. எனவே, உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கையை வருகின்ற காலத்திலே அரசு கண்டிப்பாக நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எஸ்.பி.வெங்கடேஷ்வரன்:** உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடம் பகுதி நேர நியாய விலைக் கடை வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவரும் விரைவாக பிரித்துத் தருவதாக உறுதி கூறினார். ஆனால், இது வரை எங்கள் தருமபுரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மிட்டாரெட்டிஅள்ளி ஊராட்சி பூமரத்தூர், மானியதஅள்ளி ஊராட்சி ஜீவா நகர், மானியதஅள்ளி ஊராட்சி கீழ்பூரிக்கல், மானியதஅள்ளி ஊராட்சி மலையப்ப நகர், அம்பேத்கர் காலனி, நல்லம்பள்ளி பி.சி. தெரு, ஆவாரங்காட்டூர், மத்தாளப்பள்ளம், கடுகவாரம்பட்டி, சவுலூர், எம். கே.எஸ்.நகர் (மணியடிக்கப் பெற்றது) மற்றும் 13வது வார்டு, 27வது வார்டு போன்ற இடங்களில் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று மனு கொடுத்தேன். இந்த ஆண்டாவது விரைவாக பிரித்துக் கொடுத்து, அந்தப் பகுதி நேர நியாய விலைக் கடைகளுக்கு ஆணை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், ஒரே ஒரு கோரிக்கை. அனைத்து ரேஷன் கடைகளுக்கும் ஏழ்மையான பெண்கள்தான் வந்து அரிசி உள்ளிட்ட பொருட்களை வாங்கு கிறார்கள். மழைக் காலத்திலும், வெயில் காலத்திலும் வாங்கச் செல்வதால் ஒரு நிழல் தரும் மரம் நட ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது மேற்கூரை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களையும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**அர.சக்கரபாணி:** உறுப்பினர் அவர்கள் ஒரு பட்டியலே சொல்லியிருக்கிறார்கள். பகுதி நேரக் கடைகளைப் பிரித்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். கண்டிப்பாக, எங்கள் துறையினுடைய அதிகாரிகளை அங்கே அனுப்பி தகுதி இருக்கின்ற அத்தனை கடைகளும் விரைவிலே பகுதி நேரக் கடைகளாக பிரித்துத் தரப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அதைப் பிரித்துத் தருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படியில்லையென்றால், சென்னை தலைமைச் செயலகத்தில் இருக்கின்ற எங்கள் துறைக்கு அனுப்பினால், அதை உடனடியாக தகுதியிருக்கின்றபட்சத்தில் அந்த பகுதி நேரக் கடைகள் பிரித்துத் தரப்படும்.

அதேபோன்று, ரேஷன் கடைகளுக்கு முன்பு வெயில் காலத்திலும், மழைக் காலத்திலும் மக்கள் வந்து நின்றால், வெயில், மழையில் நனைகிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார். ஏற்கெனவே, எங்கள் துறையின் சார்பாக இந்த ஆண்டு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான இடங்களிலெல்லாம் மரங்கள் நட வேண்டுமென்று முடிவு செய்து மரங்கள் நட்டுக் கொண்டிருக்கிறோம். அதே போன்று, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகளிலும் மரங்கள் நட்டுக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்தோலோசித்து, அனைத்து நியாய விலைக் கடைகளிலும், மரம் நடுகின்ற பணிகளாக இருந்தாலும் சரி முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நியாய விலைக் கடைகளுக்கு முன்பாக கூரைகள் அல்லது எப்போதும் நிரந்தரமாக இருக்கின்ற வகையிலே தகடுகளுடன்கூடிய கூரைகள் அமைப்பதற்கு அரசின்மூலம் விரைவிலே உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர. சக்கரபாணி பதிலளித்தார்.

---

### இஸ்ரோ முன்னாள் தலைவர்

# கஸ்தூரி ரங்கன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.27-

இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரிரங்கன் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

இஸ்ரோ முன்னாள் தலைவர் பத்ம விபூஷன் கஸ்தூரிரங்கன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து வருந்தினேன்.

விண்வெளி ஆய்வில் இந்தியா மிகப் பெரும் உயரங்களை அடைவதற்கு வித்திடும் வகையில் பணியாற்றியவர் திரு. கஸ்தூரிரங்கன் அவர்கள். மிகச் சிறந்த அறிவியலாளராக இருந்ததோடு மட்டுமில்லாமல், மாநிலங்களவை உறுப்பினர், திட்டக்குழு உறுப்பினர், டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக வேந்தர் எனப் பல உயர்நிலைகளிலும் தனது அறிவாற்றலால் அப்பொறுப்புகளுக்கு அவர் பெருமை சேர்த்துள்ளார்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.எம்.தைலப்பன்

### ஏப்ரல் 27 (2015)



இளமைக்காலம் முதல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு புலவன்காடு கிளைக் கழகச் செயலாளர், ஒரத்தநாடு வட்டக் கழகச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புலவன்காடு ஊராட்சி மன்றத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும், 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஒரத்தநாடு தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றிபெற்று சிறப்பாக மக்கள் பணியாற்றி தொகுதி வாழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

விலைவாசி உயர்வு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் போராட்டம் உள்ளிட்ட தலைமை அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தனது இறுதி காலம் வரை எளிமையாக குடிசை வீட்டில் வாழ்ந்து வந்த இவர் மகளின் திருமண நிகழ்வு குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் அவரது குடிசைக்கே நேரில் சென்று விசாரித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**